Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, MARCH 22, 2024

வெள்ளிக்கிழமை மார்ச் 22, 2024 | ஒளி: 09 கதிர் 218 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ | FREE

## ‘லைட்டர்’ விற்ற இருவர் கைது



ஒரேயொரு லைட்டரை 20 இலட்சம் ரூபாய்க்கு விற்பனைச் செய்தனர் என்ற குற்றச்சாட்டின் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். வெளிநாட்டில் இருந்து கொண்டுவரப்பட்ட தங்க பிஸ்கட் எனக்கூறியே, வென்னப்புவ வைக்கால் பிரதேசத்தைச் சேர்ந்த நபரிடம் இவ்வாறு விற்பனைச் செய்யப்பட்டுள்ளனர். அவ்விருவரையும் கம்பளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தங்க பிஸ்கட் படங்களை இணையத்தளங்களில் பெற்றுக்கொண்டு, கொள்வனவு செய்வோரிடம் அவற்றைக் காண்பித்துக் கூடுதல் விலைக்கு விற்பனை செய்துள்ளனர். அவ்வாறே, தங்க பிஸ்கட் வடிவத்தில், வெளிநாட்டில் இருந்து கொண்டுவரப்பட்ட லைட்டரை விற்றுள்ளனர்.

கம்பளை, புஸ்ஸல்லாவை, வகுகபிட்டிய மற்றும் ஹெல்பொட பிரதேசங்களைச் சேர்ந்த இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவ்விருவரும் நாடளாவிய ரீதியில் சென்று, வர்த்தகர்களை, பணம் படைத்த நபர்களைச் சந்தித்து நண்பர்களாகி இவ்வாறு போலியான தங்க பிஸ்கட்டுகளை விற்பனைச் செய்து வந்துள்ளமை விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, தங்க பிஸ்கட் எனக்கூறி, தங்கநிறத்திலான லைட்டர் மற்றும் வெளிநாட்டு நாணயத்தாள்கள் சில, அவர்களுடைய வாழைத்தோட்டத்தில் சுமார் 4 அடி ஆழத்தில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சபாநாயருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை:


# தோற்றது



- ஆதரவு-75
- எதிர்ப்பு-117
- 33 பேர் பங்கேற்கவில்லை

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் எதிர்கட்சிகளினால் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை 42 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது. சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக 75 வாக்குகள் அளிக்கப்பட்டநிலையில் அதற்கு எதிராக 117 வாக்குகள் அளிக்கப்பட்டன.

தொடர்ச்சி P2




அரசாங்கம் மீதான மக்களின் அங்கீகாரம்

## பெப்ரவரி மாதத்தில் 7% ஆக குறைந்துள்ளது

முழுச் செய்தி P6

## “சம்பிரதாயம் தெரியாத சபாநாயகர்”

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச



தற்போதைய பாராளுமன்றத்தின் சபாநாயகர், Erskine May போன்ற சர்வதேச வழிமுறைகளைப் பாராளுமன்றத்தில் எந்தளவு தூரம் பின்பற்றினார் என்பதில் சிக்கல் நிலவுகிறது. பொலிஸ் மா அதிபர் நியமனம், நிகழ்நிலை காப்பு பாதுகாப்பு தொடர்பான சட்டம் உள்ளிட்டவற்றை அவர் கையாண்ட விதம் பிரச்சினைக்குரியது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பொலிஸ் மா அதிபர் நியமனத்தின் போது, ஜனாதிபதியால் பரிந்துரைக்கப்பட்ட நபருக்கு நால்வர் ஆதரவு தெரிவித்ததாகவும், இருவர் நிராகரித்ததாகவும், மேலும் இருவர் வாக்கெடுப்பில் பங்கெடுக்கவில்லை என்றும் அரசியலமைப்பு பேரவையின் செயலாளர் தலைமையிலான அதிகாரிகள் தெரிவித்தனர். அரசியலமைப்பின் 41 (ஈ) பிரிவுக்கு அமைய, அதனை ஏற்றுக் கொள்ளவும் முடியாது, அதனை நிராகரிக்கவும் முடியாது என கூறினர். இதுதான் அவர்களின் பதிவு.

கௌரவ சபாநாயகர் நான்கு வாக்குகள் இடப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் நியமனத்தை அங்கீகரித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## புலம்பெயர் உறவுகளின் முதலீடுகளை வரவேற்கிறேன்

நிதர்ஷன் வினோத்

இலங்கைக்கான நியூசிலாந்து துணை உயர்ஸ்தானிகர் அன்ரேவ் ட்ராவெள்ளர் (Andrew Traveller), வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் வியாழக்கிழமை (21) சந்தித்துக் கலந்துரையாடினார். இந்த சந்திப்பு, யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் இலங்கைக்கான நியூசிலாந்து துணை உயர்ஸ்தானிகர் ஆளுநரிடம் கேட்டறிந்துக்கொண்டார். மாகாணத்தின் கல்வி, பொருளாதார, வாழ்வியல்நிலை தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. வடக்கு, மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் காணி விடுவிப்பு, மீள்குடியேற்றம், சுற்றுலாத்துறை அபிவிருத்தி போன்ற விடயங்கள் தொடர்பிலும், முதலீட்டு வலயங்களை ஸ்தாபித்தல் தொடர்பிலும் ஆளுநரால் தெளிவுப்படுத்தப்பட்டது.

தொடர்ச்சி P2

## “இறந்து பிறந்தனர்”



2017ஆம் ஆண்டு அரசாங்கத்தில் இருந்தபோது, மாகாண சபைத் தேர்தல் திருத்த முறைமையை நெருக்கடிக்குள்ளாக்கி நாட்டு மக்களின் தேர்தல் உரிமையை பறித்து மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## யாருக்கு அலை வீசினாலும் வெற்றி பெறுவது நாமே



சவால்களை ஏற்காத ஒரு தலைவரால் நாட்டை கட்டியெழுப்ப முடியாது என்றும் மொட்டுக் கட்சியில் ஏராளமான வேட்பாளர்கள் உள்ளனர், ஆனால், சவால்களை வென்ற தலைவருக்கு வாய்ப்பு வழங்குவதில் தவறில்லை என்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

யாருக்கு அலை வீசினாலும் ஜனாதிபதி தேர்தலில் மொட்டுக் கட்சி ஆதரிக்கும் வேட்பாளர் நிச்சயம் வெற்றி பெறுவார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மொட்டுக் கட்சி ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தை சரியான நேரத்தில் ஆரம்பிக்கவுள்ளதாகவும் அமைச்சர் கூறினார். கம்பஹா, நைவல பிரதேசத்தில் புதன்கிழமை (20) இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளும் அதற்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அளித்த பதில்களும் வருமாறு.

கேள்வி : பசில் தலைமையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது அல்லவா? அதில் எடுக்கப்பட்ட மிக முக்கியமான முடிவு என்ன?

தொடர்ச்சி P2

## ஜனாதிபதி ஏன் பயப்படுகிறார்?



சட்ட அனுபவம் நன்கு கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மாகாணங்களுக்கான பொலிஸ் அதிகாரம் தொடர்பாக ஏன் பயப்படுகிறார் எனத் தெரியவில்லையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (21) இடம்பெற்ற சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான இறுதி நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஆசிரியர் பற்றாக்குறையை தீர்க்க புதிய திட்டம்



மலையக பாடசாலைகளில் நிலவும் கணித, விஞ்ஞான, தொழில்நுட்ப ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்க்க, புதிய திட்டம் வகுக்கப்பட உள்ளதாக இலங்கை பாராளுமன்றத்தின் மலையக ஒன்றியத்தின் தலைவரான வேலு குமார் எம். பி. தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின், புதிதாக உருவாக்கப்பட்ட மலையக ஒன்றியத்தின், முதலாவது கூட்டம் நடைபெற்றது. அதன் போது, பாராளுமன்ற உறுப்பினர்கள் மனோ கணேசன்,

தொடர்ச்சி P2

## வெடுக்குநாறிமலை பூசாரிக்கு வருத்தம்



க.அகரன்

வவுனியா வடக்கு- வெடுக்குநாறிமலையின் பிரதான பூசாரியான தம்பிராசா மதிமுகராசா சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கடந்த சிவராத்திரி தினத்தன்று பொலிஸாரின் வன்முறையால் ஆலயபூசகர் உள்ளிட்ட 8 பேர் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் கடந்த 19 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் குறித்த எட்டுப் பேரையும் விடுதலைசெய்து வவுனியா நீதிமன்று செவ்வாய்க்கிழமை (19) உத்தரவு பிறப்பித்தது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## “இறந்து பிறந்தனர்”

இதற்கு காரணமானவர்கள்தான் இன்று உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு, மக்களின் ஜனநாயக உரிமை பற்றிப் பேசுகிறார்கள். இறந்து பிறந்ததை போன்றே எதிர்க்கட்சியினர் தற்போது செயற்படுகிறார்கள். என வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை(21) இடம்பெற்ற சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான இறுதி நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

பாரிய பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு கட்டம் கட்டமாக தற்போது முன்னேற்றமடைகிறது. இந்த முன்னேற்றத்தை எதிர்க்கட்சியினர் விரும்பவில்லை. அரசாங்கத்தை நெருக்கடிக்கு உள்ளாக்குவதற்குக் கடந்த காலங்களில் இவர்கள் முன்னெடுத்த முயற்சிகள் தோல்வியடைந்த நிலையில் தற்போது சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையைக் கொண்டு வந்துள்ளார்கள்.

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் நிகழ்நிலை காப்புச் சட்டம் இயற்றப்பட்ட விதம்,பொலிஸ்மா அதிபர் நியமனத்தில் சபாநாயகர் வாக்களித்த விதம் என்பனவற்றைப் பிரதான குற்றச்சாட்டுக்களாக எதிர்க்கட்சியினர் முன்வைத்துள்ளனர்

நிகழ்நிலை காப்புச் சட்டம் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமையவே சபாநாயகர் செயற்பட்டார். சட்டமா அதிபரின் ஆலோசனைகள் தவறு என்று குறிப்பிட்டுக் கொண்டு பிறிதொரு நபரிடம் சட்ட ஆலோசனை சபாநாயகரால் கேட்க முடியாது.சட்டமா அதிபருக்கு அப்பாற்பட்டு ஆலோசனை கோருவதாக இருந்தால் பிரதம நீதியரசரிடமே ஆலோசனை கோர வேண்டும் அது நடைமுறைக்குச் சாத்தியமற்றது என்றார்.

## ஆசிரியர் பற்றாக்குறையை தீர்க்க புதிய திட்டம்

சுஜித் சஞ்சய் பெரேரா மற்றும் கஜேந்திரன் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர்.

இக்கலந்துரையாடலுக்கு கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளும், கொழும்பு, கண்டி, பதுளை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் உள்ள தமிழ்த் தேசிய பாடசாலைகளின் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டிருந்தனர்.

இம்மாவட்டங்களில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய பாடசாலைகளில் தற்போது நிலவும் ஆசிரிய பற்றாக்குறைகள் மற்றும் பௌதீக வள குறைபாடுகள் பற்றிக் கலந்துரையாடப்பட்டது. அவற்றுக்கான தீர்வுகளைக் கல்வி அமைச்சின் அதிகாரிகள் முன்வைத்தனர்.

இக்கலந்துரையாடலின் போது பொதுவாக அனைத்து பாடசாலைகளிலும் உயர்தர வகுப்பிற்கான ஆசிரிய பற்றாக்குறை வெளிப்படுத்தப்பட்டது. குறிப்பாகக் கணித, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பிரிவுகளில் இந்த நிலைமை மிக மோசமாக உள்ளமை தெரிய வந்தது.

எனினும் அதனை நிவர்த்தி செய்ய அவசியமான துறை சார்ந்த ஆசிரியர்கள் இல்லையென்பதே தெரிய வந்தது. இச் சூழ்நிலையில் இருந்து மீள்வதற்கு புதிய ஒரு திட்டத்தை வகுக்க வேண்டிய தேவை உள்ளதென்பது சுட்டிக்காட்டப்பட்டது. அதற்கமைய இந்திய அரசாங்கத்திற்கு ஆசிரிய தேவை பற்றிய திட்டம் ஒன்று தயார் செய்து முன்வைப்பதோடு அவர்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

## வெடுக்குநாறிமலை பூசாரிக்கு வருத்தம்

இந்நிலையில் விடுதலையான ஆலயத்தின் பூசாரியார் சுகவீனமடைந்தநிலையில் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் புதன்கிழமை (20) அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்ற கோரிக்கையினை வலியுறுத்தி 5 நாட்கள் சிறைச்சாலையில் அவர் உண்ணாவிரதம் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாருக்கு அலை வீசினாலும்...

பதில் : மே தினம் பற்றிக் கலந்துரையாடப்பட்டது. மொட்டுக் கட்சி மே தினத்தை ஒரு கட்சியாகத் தினமும் ஏற்பாடு செய்தது. காலி முகத்திடலை நிரப்பி மே தினத்தைக் கொண்டாடினோம். இந்த நேரத்தில், காலி முகத்திடல் எனது அமைச்சின் கீழ் உள்ள ஒரு நிறுவனத்திற்கு சொந்தமானது. காலி முகத்திடல் அரசியல் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட மாட்டாது என வர்த்தமானியில் அறிவித்துள்ளோம். அடுத்து பெரிய இடத்தை தேர்ந்தெடுத்துள்ளோம். மிக உயர்மட்டத்தில் மே தினப் பேரணியை நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

கேள்வி: அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் யார் போட்டியிடுவது என்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படவில்லையா?

பதில் : நாங்கள் அதைப் பற்றிக் கலந்துரையாடவில்லை. ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னரே அது பற்றி பேச வேண்டும். சரியான நேரத்தில் சரியானது நடக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

கேள்வி : ஜனாதிபதி தேர்தல் வரப்போகிறது என பசில் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவை ஆதரிப்பீர்களா? அல்லது வேறு வேட்பாளர் முன்வைக்கப்படுவாரா?

பதில் : எனது தனிப்பட்ட கருத்து முன்னர் வெளியிடப்பட்டது. அந்த நேரத்திலும் திரு.ரணில் விக்ரமசிங்க வருவாராயின் தற்போதைய வேட்பாளர்களில் அவர்தான் பொருத்தமானவர் என்று கூறினேன். சவாலை ஏற்று வெற்றி பெற்ற தலைவர். நாட்டின் அமைப்பை மாற்ற முயற்சிக்கும் ஒரு தலைவராக இந்த நேரத்தில் அவர் மிகவும் பொருத்தமானவர். இதைத்தான் இந்த நாட்டு மக்களும் கேட்கின்றனர். அவருக்கு ஆதரவளிப்பது நமது கடமையாகவே நான் பார்க்கிறேன் என்றார்.

# தோற்றது

நிகழ்நிலை காப்பு சட்ட மூலம் உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகளை மீறி சபாநாயகரினால் நிறைவேற்றப்பட்டமை, பொலிஸ் மா அதிபர் நியமனத்தில் அரசியலமைப்பை மீறி சபாநாயகர் செயற்பட்டமை ஆகிய இரு பிரதான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இந்த சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைப் பாராளுமன்ற பிரதிப் பொதுச் செயலாளர் ஷமிந்த குலரத்னவிடம் 05-03-2024 அன்று கையளித்தது. இந்த சபாநாயகருக்கு எதிரான இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு, ஜே .வி.பி. ஆகிய கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தி 44 எம்.பிக்கள் கையெழுத்திட்டிருந்தனர்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் 19,20,21ஆம் திகதிகளில் நடத்தப்பட்டது. வியாழக்கிழமை (21) நடந்த இறுதி நாள் விவாதத்தின் முடிவில் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பியினால் வாக்கெடுப்பு கோரப்பட்டதையடுத்து மாலை 4.35 மணிக்கு இலத்திரனியல் முறையிலான வாக்கெடுப்பு இடம்பெற்றது.

இந்த வாக்கெடுப்பில் ஜே.வி.பி. தலைவரான அநுர குமார திசாநாயக்க, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணித் தலைவரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் , தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி தலைவரான சி.வி. விக்னேஸ்வரன் உள்ளிட்ட 33 எம். பிக்கள் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## “சம்பிரதாயம் தெரியாத சபாநாயகர்”

அரசியலமைப்பு பேரவையின் கூட்டம் நிறைவு பெற்றதன் பின்னர், ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

வாக்களிக்காதவர்கள் வாக்களித்ததாகவே கருதப்படுவார்கள் என சபாநாயகர் அந்த கடிதத்தில் தெரிவித்துள்ளார். அவ்வற்றான அதிகாரம் சபாநாயகருக்கு வழங்கப்பட்டுள்ளதா? அவ்வாறான தீர்மானத்தை அவரால் எடுக்க முடியுமா? ஒன்று அவருக்கு இந்த விடயம் தெரியாமல் இருந்திருக்கலாம், அல்லது நிறைவேற்று அதிகாரமுடையவரின் கையில் ஜனநாயகத்தை வழங்கும் சூழ்ச்சிக்குச் சபாநாயகர் துணைபோயுள்ளார்.இதனை வருத்தத்தோடு தெரிவிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

பாராளுமன்றத்திலுள்ள யோசனைக்கு ஆதரவாக 85 வாக்குகளும், எதிராக 65 வாக்குகளும், வாக்களிப்பைத் தவிர்த்தவர்களின் எண்ணிக்கை 20 என வைத்துக்கொள்வோம்.

இவ்வாறான நிலையில் 85 உடன், 20 இணைத்து 85-85 என கூற முடியுமா? இதற்குப் பதில் அழியுங்கள் பார்ப்போம். ஜனநாயகத்தைச் சீரழித்துள்ள பிரதான நபராகவே சபாநாயகர் செயற்பட்டுள்ளார்.

சபாநாயகர் தனது அறுதியிடும் வாக்கைத் தவறான முறையில் பயன்படுத்தி தற்போதைய பொலிஸ் மா அதிபரைச் சட்டவிரோதமான முறையில் நியமித்துள்ளார். சபாநாயகர் அரசியலமைப்பு மற்றும் அதன் விதிகளைத் தெளிவாக மீறியுள்ளார் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

சபாநாயகருக்கு Yes, No மற்றும் Abstention என்ற 3 வார்த்தைகளின் அர்த்தம் கூட தெரியாது. பாராளுமன்றத்தில் எவ்வாறு வாக்களிக்கப்பட வேண்டும் என்பது குறித்து விடயத்தில் கூட அவருக்குச் சரியான புரிதல் இல்லை. வேண்டுமென்றே நிறைவேற்று அதிகாரத்துடன் இணைந்து சட்ட வாக்கத்தின் அதிகாரத்தை குறை மதிப்பிற்கு உட்படுத்தும் சதியின் பங்காளியாக மாறியுள்ளார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிறைவேற்று மற்றும் சட்டவாக்கம் நீதித்துறைக்கு இடையே தடைகள் மற்றும் மற்றும் சமன்பாடுகள் இருந்தாலும், சபாநாயகர் இந்த தடைகள் மற்றும் சமன்பாடுகளை வேண்டுமென்றே மீறியுள்ளார். கிரிக்கெட் தொடர்பான விவாதத்தில் கூட, சபாநாயகரின் நடந்த கொண்ட விதம் ஏற்புடையதல்ல என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## புலம்பெயர் உறவுகளின் முதலீடுகளை வரவேற்கிறேன்

அத்துடன், புலம்பெயர் தேசத்து உறவுகளின் முதலீடுகளை வரவேற்பதாகவும் இலங்கைக்கான நியூசிலாந்து துணை உயர்ஸ்தானிகரிடம் வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

## ஜனாதிபதி ஏன் பயப்படுகிறார்?

அண்மையில் எமது ஜனாதிபதி, பொலிஸ் அதிகாரமற்ற 13ஆவது திருத்தச் சட்ட அமுலாக்கம் பற்றி எடுத்துரைத்தார். காலத்துக்குக் காலம் எமது ஜனாதிபதி 13 தொடர்பாக, இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஏதேதோ கூறுவதும் பின்னர் அவற்றை மறந்துவிடுவதும் 2015ஆம் ஆண்டு நல்லாட்சிக் காலத்திலிருந்து நாம் கண்ட அனுபவமாகும். சட்ட அனுபவம் நன்கு கொண்ட எமது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மாகாணங்களுக்கான பொலிஸ் அதிகாரம் தொடர்பாக ஏன் பயப்படுகிறார் என என்னால் அனுமானிக்க முடியவில்லை. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நீதித்துறையின் உத்தரவு பொலிஸாரால் மீறப்பட்டுள்ள எத்தனையோ சம்பவங்கள் உள்ளன.

இதனைவிட முக்கியமான கருத்தொன்றை எமது வெளிநாட்டமைச்சர் அண்மையில் எடுத்துரைத்துள்ளார். தமிழர்கள் சமஷ்டி கோருவதற்கு உரித்துடையவர்கள் மட்டுமல்ல சமஷ்டியானது பிரிவினைக்கு அத்திபாரமாக இருக்காது அது ஒற்றுமைக்கான அத்திபாரமே எனவும் இது தொடர்பாகப் பல வெளிநாடுகளின் சமஷ்டி அரசியலமைப்பின் தன்மைகளையும் எடுத்துக் காட்டியுள்ளார். இது அமைச்சரது தனிப்பட்ட கருத்தா அல்லது அமைச்சரவையின் கருத்தா என்பது ஒருபுறமிருக்க, அரசாங்கத்தின் ஒரு சக்திவாய்ந்த அமைச்சர் ஒருவர் இத்தகைய கருத்தொன்றைக் கூறியதையிட்டு நான் வரவேற்கின்றேன் என்றார்.

## மூன்று தினங்களுக்குள் 4.5 கோடி ரூபா செலவு

### நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் குறித்து சபாநாயகர்

எனக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் இடம்பெற்ற 3 தினங்களுக்கு மட்டும் 4.5 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது. நாடு தற்போதுள்ள நிலையில் இது தாங்கிக்கொள்ள முடியாத செலவு எனத் தெரிவித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன 40 வருடங்களாகக் கொள்கையின் அடிப்படியில் மட்டுமே செயற்பட்டேன், யாரின் அடியாளாகவும் செயற்படவில்லை எனவும் கூறினார்.

சபாநாயகருக்கு எதிரான எதிர்க்கட்சிகளினால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையிலாப் பிரேரணை பாராளுமன்றத்தில் கடந்த 3 தினங்களாக விவாதத்திற்கு எடுக்கப்பட்டு நேற்று வாக்கெடுப்பிற்கு விடப்பட்ட நிலையில், தோற்கடிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து தனது சபா பீடத்துக்கு வந்து விடுத்த விசேட அறிவிப்பிலேயே இதனைத்தெரிவித்த சபாநாயகர் மேலும் கூறுகையில்,

2022இல் இந்த நாட்டின் சபாநாயகராக நான் எப்படிப் பல சிக்கலான சவால்களை எதிர்கொண்டேன் என்பதை நீங்கள் அனைவரும், குறிப்பாக நமது இளம் தலைமுறையினர் மறக்கவில்லை என்று நினைக்கிறேன். நாடு அராஜகமாக இருந்த நேரத்தில், இலங்கையின் அரசியலமைப்பைப் பின்பற்றி சபாநாயகர் என்ற முறையில் எங்கள் பாராளுமன்றத்தைப் பாதுகாக்க எனது உயிரைப் பணயம் வைத்தேன்

சிலர் பாராளுமன்றத்தை அழிக்கும் நோக்கில் மிக அருகில் வந்ததால், கட்சித் தலைவர்கள் விரைவாக அப்பகுதியை விட்டு வெளியேறினர், ஆனால் நான் மட்டும் இதில் தங்கியிருந்தேன். அதிர்ஷ்டவசமாக, அதைத் தடுக்கவும், பெரும் அழிவை நிறுத்தவும் முடிந்தது. அரசைச் செயலிழக்கச் செய்யும் திட்டம் முறியடிக்கப்பட்டது இல்லை என்றால் இன்று உங்களால் நம்பிக்கை வாக்கெடுப்பைக் கொண்டு வந்திருக்கவும் முடியாது, என்னால் அதை எதிர்கொண்டிருக்கவும் முடியாது, இந்த பாராளுமன்றம் இருந்திருக்கவும் முடியாது.

நீங்கள் என்னைச் சபாநாயகர் பதவிக்கு ஏகமனதாக நியமித்த நாள் முதல், பாராளுமன்ற ஜனநாயகத்திற்காகவும், இலங்கைக் குடியரசின் உயிர்வாழ்விற்காகவும் நான் எனது முழு ஆற்றலுடன் பணியாற்றி வருகிறேன்.

ஜனாதிபதியின் அழுத்தத்தால் சில முடிவுகளை நான் எடுத்ததாகச் சிலர் தொடர்ந்து குற்றம் சாட்டுவதை நான் பார்த்திருக்கிறேன். ஜனாதிபதி எனது நீண்டகால நண்பர் என்பது உண்மையே. எவ்வாறாயினும், 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில், நாங்கள் இருவரும் முற்றிலும் மாறுபட்ட இரண்டு நிலைப்பாடுகளைக் கொண்டிருந்தோம். ரணில் விக்ரமசிங்க எனது நண்பர், நாங்கள் இணைந்து நாட்டுக்காக சில பணிகளைச் செய்திருந்தாலும், அவர் நாட்டின் நிறைவேற்று அதிகாரம் பெற்ற பிறகு சட்டமன்றத் தலைவர் என்ற முறையில் எனக்கு எந்த அழுத்தத்தையும் கொடுக்கவில்லை. கடந்த 40 வருடங்களாக மகிந்த யாப்பா அபேவர்தன வாக்கிய நான் கொள்கைகளைத் தவிர வேறு யாருடைய அரசியல் கைக்கூலியாக இருக்கவில்லை என்பதை ஜனாதிபதி உட்பட அனைவரும் நன்கு புரிந்து கொண்டுள்ளார்கள்.

எனது ஒரே கவலை என்னவென்றால், நம்பிக்கையில்லா பிரேரணையால் பாராளுமன்ற அமர்வுகளின் இந்த மூன்று நாட்களுக்குக் கிட்டத்தட்ட 4.5 கோடி ரூபா செலவு ஏற்பட்டுள்ளது அது நம்மைப் போன்ற ஒரு நாட்டுக்குக் கட்டுப்படியாகாது.



பாராளுமன்றத்திலுள்ள 225 பெரும் திருடர்கள், ஊழல் வாதிகள் என குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படும் நிலையில் பாராளுமன்றத்தில் அரசு மற்றும் எதிர்க்கட்சியில் இருந்து நீங்கள் யாரும் என்மீது ஊழல் குற்றச்சாட்டை முன்வைக்காததை 4 தசாப்தங்களுக்கும் மேலாக எனது அரசியல் வாழ்க்கையில் நான் பெற்ற மிகப்பெரிய கௌரவமாகக் கருதுகிறேன் என்று கூறியதுடன், இன்னும் பல விடயங்களையும் முன் வைத்தார்.

# அமைச்சரின் மனைவிக்கு நீதிமன்றம் கடும் கட்டளை

நீதவான் நீதிமன்றில் இடம்பெற்ற வழக்கு தொடர்பான நீதிமன்றில் ஆஜராகுமாறு முன்னர் வழங்கிய உத்தரவை மீறியதாகக் கூறப்படும் அமைச்சரவை அமைச்சர் ஒருவரின் மனைவியை எதிர்வரும் 22ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு தம்புத்தேகம நீதவான் புத்திக மல்வத்த உத்தரவிட்டுள்ளார்.

இந்த நீதிமன்ற உத்தரவின் பிரகாரம், சந்தேகத்திற்குரிய அமைச்சரின் மனைவி அன்றைய தினம் நீதிமன்றில் ஆஜராகாவிட்டால், நீதிமன்றத்தை அவமதித்ததாகக் கருதி மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என நீதவான் தெரிவித்துள்ளார். ஐரங்கனி டி சில்வா என்ற பெண்ணை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

சந்தேகநபரான அந்த பெண், குருநாகல் மாஎலிய பிரதேசத்தில் எம். கே.எக்ரோ இன்டர்ஸியல் எனும் பெயரில் முன்னெடுத்துச் செல்லும் விலங்குகளை பாதுகாப்பும் மத்திய நிலையத்தில், பராமரிக்கப்படும் விலங்குகளில் ஆறு பசு மாடுகளை, நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு, தம்புத்தேகம நீதவான் இன்றைக்கு 10 வருடங்களுக்கு முன்னர் வழங்கிய கட்டளையை மீறிவிட்டதாக, அமைச்சரின் மனைவிக்கு எதிராக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வவுனியா சிறைச்சாலை

# “வதை முகாமை விட மோசமானது”

## சிறைசென்று விடுதலையானோர் தெரிவிப்பு

**க.அகரன்**

வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில், அதன் கொள்ளளவை விட மூன்று மடங்கான கைதிகள் அடைக்கப்பட்டுள்ளதுடன், அது வதை முகாமைவிட மோசமானது என்று வெடுக்குநாறிமலையில் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சிவாராத்தி தினத்தில் வெடுக்குநாறிமலையில் கைது செய்யப்பட்ட 8 பேர் வவுனியா சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு, பின்னர் வவுனியா நீதிமன்றால் செவ்வாய்க்கிழமை (19) விடுவிக்கப்பட்டனர்.

குறித்த நபர்களில் இருவர் சிறைச்சாலையில் இடம்பெறும் விடயங்கள் தொடர்பாக ஊடகங்களுக்கு வியாழக்கிழமை (21) கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளனர்.

தொடர்ந்து அவர்கள் கருத்து தெரிவித்துள்ளதாவது,

வவுனியா சிறைச்சாலையினை வதைமுகாம் என்றே கூறமுடியும். எந்தவோர் அடிப்படை வளமும் அற்ற ஒரு சிறைச்சாலையாக அது காணப்படுகின்றது. 200 பேர் அளவிலான கைதிகளே அங்கு இருப்பதற்கான இடவசதி காணப்படுகின்றது. ஆனால், நாம் விடுதலையாகும் வரை 586 கைதிகள் அங்கு அடைக்கப்பட்டிருந்தனர்.




அத்துடன், அடிப்படை விடயங்களே அங்கு இல்லாத நிலை காணப்படுகின்றது. குறிப்பாக நீர் வசதி மிகவும் பற்றாக்குறையாக உள்ளது. அத்தனை பேருக்குமாக சேர்த்து சிறிய நீர்த்தொட்டி ஒன்றே அங்கு அமைக்கப்பட்டுள்ளது. அது தொடர்ந்தும் இயங்குவதில்லை. ஆறுவாளி தண்ணீரே ஒருநாளில் ஒருவருக்கு வழங்கப்படுகின்றது. அதற்காக இரண்டரை மணித்தியாலங்கள் காத்திருக்கவேண்டும்.

இதேவேளை, தற்போதைய வெப்பமான காலநிலையால் கணிசமானவர்கள் சொறி, சிரங்கு போன்ற நோய்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். உயிர் ஆபத்துக்கள் நிகழக்கூடிய வாய்ப்புக்கள் கூட அங்கே காணப்படுகின்றது.

பல கைதிகள் மலசலக்கூடங்களிலும் குளியலறைகளிலும் உறங்கும் நிலை காணப்படுகின்றது. நித்திரைகொள்வதற்கான வசதிகள் இல்லை. உணவின் தரம் மிகவும் மோசமானது. கிரந்தி தன்மை கூடிய சூரை மீனே தினமும் தரப்படுகின்றது. இதனால் பலர் சிரங்கு நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது அரசாங்கத்தின் திட்டமிட்ட செயற்பாடாகவே எண்ணத் தோன்றுகின்றது. அத்துடன், பெரிய குற்றங்கள் செய்தவர்கள், சந்தேகநபர்கள், சிறிய குற்றம் செய்தவர்கள் என்று வகைப்படுத்தப்படாமல் அனைவரும் ஒரே இடத்திலேயே அடைக்கப்பட்டுள்ளனர்.

தனால் அங்கு செல்லும் பலர் பெரிய குற்றவாளிகளாக மாற்றப்படும் நிலை அங்கு காணப்படுகின்றது. இதனால் குற்றவாளிகளும், குற்றங்களும் மேலும் அதிகரிக்கும் நிலையே ஏற்படும் என்றனர்.



# இந்திய மீனவர்கள் 32 பேர் கைது

**நிதர்ஷன் வினோத்**


இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 32 பேர், ஐந்து விசைப்படகுகளுடன் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழக மீன்பிடி துறைமுகங்களில் இருந்து மீன்பிடிக்க சென்று நெடுந்தீவு கடற்பரப்பில் மூன்று படகுகளுடன் மீன் பிடித்துக் கொண்டிருந்த 25 மீனவர்கள் மற்றும் மன்னார் கடற்பரப்பில் இரண்டு விசைப்படகுகளுடன் மீன்பிடித்துக் கொண்டிருந்த 7 மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை, மன்னார் கடற்படை முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 32 பேரும், 5 படகுகளுடன் சிறைபிடிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் வியாழக்கிழமை (21) ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சாரதிக்கு திடீர் சுகயீனம்; விபத்தில் 16 பேர் காயம்

**சுமணசிறி குணதிலக்க**



உல்கந்த பிரதேசத்திலிருந்து வெல்லவாய நகருக்கு பயணித்து கொண்டிருந்த தனியார் பேருந்து வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் வெள்ளவாய பௌத்த மந்திராவுக்கு அருகில் வீதியை விட்டு விலகி வியாழக்கிழமை (21) கவிழ்ந்து விபத்துக்கு உள்ளானதில் பாடசாலை மாணவர்கள் ஐவர் உட்பட 11 பேர் காயமடைந்துள்ளனர்.

இவ்விபத்தில் காயமடைந்தவர்கள் வெல்லவாய ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பேருந்தின் சாரதிக்கு ஏற்பட்ட திடீர் சுகவீனம் காரணமாகவே விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வெல்லவாய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# ஹரிகரனை பாராட்டி கௌரவிப்பு

**அ.அச்சுதன்**

பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து உலக சாதனை படைத்த திருக்கோணமலை இந்துக் கல்லூரியில் ஒன்பதாம் வகுப்புப் படிக்கும் ஹரிகரன் தன்வந்த் என்ற மாணவனை கனடா திருக்கோணமலை நலன்புரிச் சங்கம், ஒரு இலட்ச ரூபாய் பரிசுத் தொகையும் வெற்றிக் கிண்ணமும் வழங்கிக் புதன்கிழமை (20) கௌரவித்துள்ளது.

இந்நிகழ்வு திருக்கோணமலை இந்துக் கல்லூரியில் மாணவர் ஒன்றுகூடலின் போது இடம்பெற்றுள்ளது.

கனடா-திருகோணமலை நலன்புரிச் சங்கத் தலைவர் க.இரகுநாதன் மற்றும் அதன் காப்பாளரும் திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தின் தலைவருமாகிய சண்முகம் குகதாசன் இவற்றை வழங்கியுள்ளனர்.



# காஸா நிதியத்துக்கு செந்தில் நிதியுதவி

**நூருல் ஹுதா உமர்**

காஸாவில் (Gaza) இடம்பெற்று வரும் மோதல்களில் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு இப்தார் மாதத்தில் நிவாரணம் வழங்குவதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஜனாதிபதி காஸா நிதியத்திற்கு கிழக்கு மாகாண ஆளுநரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான், 5 இலட்சம் ரூபாய் நிதியை வழங்கியுள்ளார்.

காஸா குழந்தைகள் நிதியத்துக்கு நன்கொடையாக கிடைக்கப்பெற்றுள்ள நிதி காஸாவில் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளின் நலன்புரி தேவைகளுக்காக இலங்கை அரசாங்கத்தால் விரைவில் அனுப்பிவைக்கப்பட உள்ளது.

இந்த நிதியத்துக்கு, வர்த்தகர்கள், பொது அமைப்புகள் உட்பட பல்வேறு தரப்பினரும் உதவிகளை வழங்கிவருகின்றனர்.

# உணவக உரிமையாளருக்கு 2 இலட்சம் ரூபா தண்டம்


**எம்.றொசாந்த்**

யாழ். நாவாந்துறை பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் பொது சுகாதார பரிசோதகர்களால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின்போது, பழுதடைந்த உணவுகள், இறைச்சி கறிகள் என்பன மீட்கப்பட்டதுடன், சுகாதாரத்துக்கு கேடு விளைவிக்கும் வகையிலான சுற்றாடலும் அவதானிக்கப்பட்டுள்ளது.



இதனையடுத்து குறித்த உரிமையாளருக்கு எதிராக, பொது சுகாதார பரிசோதகர்களால், 20 குற்றச்சாட்டுக்களின் கீழ், யாழ்.மேலதிக நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதன்போது, குற்றச்சாட்டுக்களை உரிமையாளர் ஏற்றுக்கொண்டதையடுத்து, ஒவ்வொரு குற்றத்திற்கும் 10 ஆயிரம் ரூபாய் வீதம், 20 குற்றச்சாட்டுக்களுக்கு 2 இலட்ச ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.




# 45ஆவது வருட அகவை தின விழா

**ஆ.ரமேஸ்.**

புத்தாக்கம் நிறைந்த புதுமைகளையும், சாதனைகளையும் கடந்த 04 தசாப்தங்களாக நிகழ்த்தி வரும் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயம் அரை நூற்றாண்டு பயணத்தை அண்மித்து தனது 45ஆவது வருட அகவை தின விழாவை மிக கோலாகலமாக கொண்டாடவுள்ளது.

இந்நிகழ்வு வெள்ளிக்கிழமை (22) ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்து திங்கட்கிழமை (25) வரை தினமும் காலை 9 மணி முதல் மாலை 6 மணிவரை நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பாடசாலையின் அதிபர் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து நான்கு நாட்கள் இடம்பெறவுள்ள அகவை தின சிறப்பு நிகழ்வில் கண்காட்சி, கௌரவிப்பு, பரிசளிப்பு, கலை கலாசார நிகழ்வுகள், 45ஆவது ஆண்டு நிறைவு சிறப்பு நூல் வெளியீடு, பல்பொருள் அங்காடி மேலும் பாடசாலை சமூகம் சார்ந்தோரின் நடை பவனி என்பன இடம்பெறவுள்ளது.

# உலருணவுப் பொதிகள் விநியோகம்



வசதி குறைந்த மக்களுக்கு உதவிக்கரம் நீட்டும் முகமாக, பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு நிலை) ஃபஹீம்-உல்-அஸீஸின், ரஹ்மத் அறக்கட்டளை மற்றும் இலங்கை செய்தியாளர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கு உலர் உணவுப் பொதிகள் தகுதியான மக்களுக்கு வழங்குவதற்காக வழங்கி வைக்கப்பட்டுள்ளன. புனித ரமழான் மாதத்தில் இந்த அமைப்புகளைச் சார்ந்திருக்கும் வசதி குறைந்த மக்களுக்கு மத்தியில் இந்த உலர் உணவுப் பொதிகள் பகிர்ந்தளிக்கப்படும். பாகிஸ்தான் எப்போதும் இலங்கை மக்களுக்கு உதவிக் கரம் நீட்டத் தயாராக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எதிர்கால சந்ததியினருக்கு பெரும் சாபக்கேடாகும்

இயற்கைக்கு அடிபணியாத பயணத்தின் தர்க்கரீதியான இழப்பீட்டை ஒட்டுமொத்த மனித சமுதாயமும் அனுபவித்து வருகிறது. காலாகாலமாக மழை பெய்யும் இயற்கை சீற்றங்கள் மிகக்குறைந்த நாடாகப் பாக்கியம் பெற்ற நம் நாட்டில். மாதக்கணக்கில் தொடர்ந்து மழை பெய்தது.

கடந்த பருவத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் இலட்சக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. தற்போது கடுமையான வறட்சியால் கிணறுகள் மற்றும் ஏரிகளின் அடிப்பகுதியையும் கீறி வருகிறது.

சுற்றுச்சூழலுக்கு உகந்த வாழ்க்கை முறையின் மதிப்பு எல்லா நேரங்களிலும் வலியுறுத்தப்பட்டாலும், பாடம் கற்காத ஒரு சமூகமாக வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

இவ்வாறானதொரு சூழலில்தான் பாடசாலைகளில் இல்லங்களுக்கிடையிலான தடகளப் போட்டிகளை ஒன்றன் பின் ஒன்றாக நிறுத்துவதற்கான அறிவிப்புகளைக் கல்வி அமைச்சு வெளியிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நிலைமை எவ்வளவு இருண்டதாக இருந்தாலும் சரி, மோசமானதாக இருந்தாலும் சரி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு விடயத்தில் நாம் இன்னும் பூஜ்ஜியத்தில்தான் இருக்கிறோம் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

சுற்றுச்சூழல், இயற்கை வளங்கள் மற்றும் நிலையான வளர்ச்சிக்கான பொருளாதார கண்காணிப்புக் குழுவில், பொலிதீன் பைகளைப் பயன்படுத்தாத வாடிக்கையாளர்களுக்குக் கொடுப்பனவு வழங்கப் பெரிய பல்பொருள் அங்காடிகள் ஒப்புக்கொண்டதாகச் செய்தி வெளியாகின்றது.

கழிவறைகளைப் பயன்படுத்துவோருக்குப் பணம் கொடுக்கும் இந்தியாவுக்கு நெருக்கமான நாடான நம் நாட்டில், 'ஷொப்பிங் பேக்' எடுக்காதவர்களுக்குக் கொடுப்பனவு கொடுக்க அங்காடி ஒன்று நடவடிக்கை எடுத்துள்ளது.

சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலையான அபிவிருத்தி தொடர்பான துறைசார் மேற்பார்வைக்கான பாராளுமன்றக் குழுவின் தலைவரான பொறியியலாளர் அஜித் மான்னப்பெரும, தலைமையில் இறுதித் தீர்மானம் எட்டப்படவிருந்தது.

பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பாவனையைக் குறைத்து சுற்றாடலைப் பாதுகாப்பதே இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் நோக்கம் என பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும தெரிவித்திருந்தார்.

ஷொப்பிங் பைகளை எடுத்துச் செல்லாத வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் தள்ளுபடியைக் காட்சிப்படுத்துமாறு பெரிய பல்பொருள் அங்காடிகளின் உரிமையாளர்களுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஆடைக் கடைகளால் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் பொலித்தீன் பைகளுக்குப் பதிலாகக் காகிதப் பைகளை அறிமுகப்படுத்துவது தொடர்பாகக் கடை உரிமையாளர்கள் குழுவொன்றும் துறைசார் மேற்பார்வை பாராளுமன்றக் குழுவின் முன்னிலையில் அழைக்கப்படவிருந்தது. அவையெல்லாம் நாட்டுக்கும் எதிர்காலத்துக்கும் நன்மை பயப்பனவாய் அமையும்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்த காலத்தில் பொலித்தீன் தடை தொடர்பில் விசேட கவனம் செலுத்தினார். ஆனால், தேவையான பின்தொடர்தல் செய்யப்படாததால், திட்டம் விரும்பிய இலக்கை எட்டவில்லை. எனவே, கடந்த காலத்திலிருந்து கற்றுக்கொண்டு, சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டத்தை விரைவாகவும் திறமையாகவும் செயல்படுத்த வேண்டும். சர்வதேச வன தினம் மார்ச் 21ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்ட நிலையில், சுற்றுச்சூழல் பாதுகாப்பில் போதிய கவனம் செலுத்தாமல் இருப்பது எதிர்கால சந்ததியினரின் சாபக்கேடாகும் என்பதை நினைவில் கொள்க.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

உங்களுடன் நண்பர்கள் சுற்றியிருக்க விரும்பும்போது, நீங்கள் தேவையில்லாமல் விலகினால், உங்களுக்கு மனச்சோர்வு இருக்கின்றது என்று அர்த்தம். இதற்கு ஒரே வழி, நீங்களே உங்களுடன் தோழமை கொள்வதுதான். உங்களுக்கு நீங்களே எஜமானன். அத்துடன், உங்களுக்கு நீங்களே நம்பிக்கையான நபரும் கூட!


ஒருவரிடம் பணம் இருக்கும்போது, அவரைச் சுற்றி, பலர் சேர்ந்துவிடுவார்கள். அவரிடம் இருக்கும் பணத்தைச் செலவழிக்கச் செய்த பின்னர், அவரைக் கைகழுவி, நடுத்தெருவில் விட்டுவிடுவது உலக யதார்த்தம். ஆனால், நல்ல நண்பர் எத்தகைய துன்பங்கள் சூழ்ந்து வந்தாலும் காவல் செய்யும் காவலன் போல் இணைந்தே இருப்பான்.

நண்பர்கள் என்று நம்பி, அவர்கள் கெட்டவர்கள் என்று தெரியாமல் போனவர்களை நாங்கள் அன்றாடம் சந்தித்துக்கொண்டிருக்கின்றோம். நண்பர்களிடம் நம்பி

இயலாது; என்னால் முடியாது எனும் எண்ணங்கள் தகர்க்கப்படல் வேண்டும். அனுபவப்பட்டவர்களுக்கு ரோசம் அதிகம். எளிதில் எவருடனும் நட்புக் கொள்ளல் ஆகாது. வீறு பெற்றவனை வீழ்த்த முடியாது. நடுவீதியில் தனிமைப்பட்டு நிற்பது பரிதாபமானது. எனவே, துணிவுடன் இயங்குவதே மனோபலத்தை உருவாக்கும்.

நன்றி- பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்



## விவசாயிகள் கோரிக்கை

கடலுடன் கலக்கும் ஆற்று நீரை விவசாயத்திற்காக வழங்கி நெல் உற்பத்தியை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என திரியாய் விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திரியாய் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் ஒன்றிணைந்து, மண் மூடைகளை 15 அடி உயரத்திற்கு அடுக்கி ஆற்றை வழிமறிப்பதற்கும் இதன்மூலம் 300 தொடக்கம் 350 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்ளவும் திட்டமிட்டுள்ளனர்.

திரியாய் நீலபனிக்கன் விவசாய சம்மேளனத்திற்குட்பட்ட பகுதியில் உள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாய நிலங்கள் நீர் வசதி இன்றி தரிசு நிலங்களாகக் காணப்படுவதாகவும் இவற்றுக்கான நீர் வசதி வழங்கப்படும் பட்சத்தில் அனைத்து நிலங்களிலும் நெற்பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியும் எனவும், தெரிவிக்கின்றனர்.

எனவே குறித்த பகுதியில் அணைக்கட்டை அமைத்து விவசாயம் மேற்கொள்வதற்கான நடவடிக்கையை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் கோரிக்கை விடுக்கின்றனர்.

- சஞ்சீவன் துரைநாயகம்

### கறுப்பு யூலையின் நாற்பதாண்டுகளின் பின் 45:

# துரையப்பா கொலையும் வன்னி நோக்கிய பெயர்வும்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

1974 இல் தமிழாராய்ச்சி மாநாட்டின் நிறைவுநாளில் நிகழ்ந்த துயரங்கள் தமிழ் மக்களிடையே சீற்றத்தை உண்டுபண்ணின. அரசாங்கம் நிகழ்வுக்குப் பொறுப்பேற்காததுடன் குற்றத்திற்குப் பொறுப்பானோரைத் தண்டிக்கவும் தவறியது. இது ஏற்கெனவே தரப்படுத்தலால் வெகுண்டிருந்த தமிழ் இளைஞர்களிடையே மேலும் சினத்தை மூட்டியது. இதைத் சாதகமாகப் பயன்படுத்தி தமிழ்த் தேசியவாத அரசியலும் அரசியல் வன்முறையும் வளர்க்கப்பட்டன. இந்த வன்முறை சாகச வாதத்திற்கான ஆதரவு 1975இல் யாழ்ப்பாணத்தில் மக்கள் செல்வாக்குடைய மாநகரசபை மேயரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான அல்ஃபிரெட் துரையப்பா கொலையுடன் தொடங்கியது. இக்கொலைக்குத் தமிழாராய்ச்சி மாநாட்டைக் காரணமாகக் காட்டுவோர் உள்ளனர். ஆனால், 1971 இலிருந்தே துரையப்பாவைக் கொல்லும் திட்டமும் முயற்சிகளும் இருந்து வந்துள்ளமையையும் நாம் கணிப்பிலெடுக்க வேண்டும்.

துரையப்பாவின் கொலை ஒரு தொடக்கம். இக்கொலையையடுத்து வடக்கில் பொலிஸ் அடக்குமுறைகள் அதிகரித்தன. துரையப்பாவின் படுகொலையின் பின்னணியில் அரசாங்கத்தின் கெடுபிடிகள் விரிந்தன. பொலிஸ் படையினர் தனது சந்தேகத்திற்கு உட்பட்ட இளைஞர்களைத் தேடுவதிலும், கைது செய்வதிலும் கைதானோரை மோசமாக நடத்துவதிலும் காட்டிய தீவிரம் முரண்பாட்டை அதிகரித்தது. இதனால் தமிழ்ப் போராளிகளும் பொலிஸும் சம்பந்தப்பட்ட தொடரான வன்முறைகள் நடைபெறத் தொடங்கின. இந்தப் பின்புலத்தில் சில தமிழர் ஐக்கிய முன்னணித் தலைவர்களது ஆசிகளுடன் 'தமிழ்த் துரோகிகள்' என்று கூறப்பட்டோரின் அரசியற் படுகொலைகளும் நடந்தன. பின்பு, போட்டி அமைப்புக்களின் போராளிகளும், தமிழர் ஐக்கிய முன்னணியின் தலைவர்களுங்கூடப் படுகொலைக்காளாயினர்.

அரசாங்கத்தின் அடக்கு முறைகளுக்கெதிராகப் போராடத் துணிந்த இளைஞர்களை வழிப்படுத்த தமிழ் அரசியல் கட்சிகளால் இயலவில்லை. தமிழரசுக் கட்சியிடமோ பிற கட்சிகளிடமோ எந்த உருப்படியான வேலைத்திட்டமும் இல்லாத நிலையில், இளைஞர் இயக்கம் அமிர்தலிங்கத்திற்கு ஆதரவானோரின் அனுசரணையுடனும் இயங்கத் தொடங்கியது. மறுபுறம் இன்னும் சில இளைஞர்கள் அவரது கட்டுப்பாட்டுக்கு உட்பட மறுத்தும் இயங்கத் தொடங்கினர்.

தமிழரசுக் கட்சித் தலைவர் செல்வநாயகம் இறந்ததையடுத்து, அவரை மரணத்தை அரசியல் இலாபத்திற்குப் பயன்படுத்த நினைத்த தமிழரசுக் கட்சி அதை ஒரு பிரசார இயக்கமாக்கும் நோக்கில் அவருடைய சாம்பலை ஊர் ஊராக ஊர்வலம் கொண்டு போனது. அப்போது திருகோணமலையில் அவ்வூர்வலம் மீது நிகழ்ந்த சிங்களப் பேரினவாதத் தாக்குதல் முக்கியமான ஒரு குறி காட்டியாகும். இதுவே திருகோணமலையில் நடந்த முதலாவது பேரினவாத வன்முறை நிகழ்வெனலாம். இவ்வாறு குடாநாட்டில் தமிழ்த் தேசியம் உத்வேகம் பெற்ற அதே காலத்தில் மலையகத்திலிருந்து தொழிலாளர்கள் வன்னிக்குப் புலம்பெயர்ந்தனர். ஒடுக்கப்பட்ட இனமான ஈழத்தமிழர்கள் அவர்களிடம் அடைக்கலமாக வந்த மலையகத் தமிழரை நடத்திய விதம் மிகவும் மோசமானது. இன்றும் ஈழத்தமிழர் வரலாறு பற்றிப் பேசும் போதெல்லாம் தமிழர் ஒடுக்கப்பட்டார்கள் என்று பேசுவோர், தமிழர் எவ்வாறு ஒடுக்கினர் என்பதை வசதியாகப் பேசாது விட்டு விடுவர்.

மலையகப் பகுதிகளில் உள்ள தோட்டங்களைத் தேசியமயமாக்கும் கொள்கை ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நீண்டகாலக் கொள்கைகளில் ஒன்று. ஆனால் தேயிலை வணிகத்தில் அந்நியக் கம்பனிகளுக்கு இருந்து வந்த அதிகாரத்தைக் கருதி ஆட்சிக்கு வந்த போதெல்லாம் அதை நடைமுறைப்படுத்த ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விரும்பவில்லை. எனினும் 1971இல் ஜே.வி.பி. கிளர்ச்சியின் பின்னணியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ்த் தோட்டங்கள் தேசியமயமாக்கல் முக்கியத்துவம் பெற்றது.

தேயிலைத் தோட்டங்களைத் தேசியமயமாக்கியதன் மூலம், அரசாங்கம், தேயிலைத் தோட்டங்களை நாட்டின் உடைமையாக்க மட்டுமே முயன்றிருந்தால் அது தேசநலன் கருதிய விடயம் என்று எண்ணியிருக்க வாய்ப்புண்டு. ஆனால், அரசாங்கம் தேசியமயமாக்கப்பட்ட தேயிலைத் தோட்டங்களில் ஒரு பகுதியை அரசாங்கப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திடமும் இன்னொரு பகுதியை ஜனவசம அமைப்பிடமும் கையளித்தது. இத் தேசியமயமாக்கற் திட்டத்தின் பின்னால் ஒரு பேரினவாத வேலைத்திட்டம் இருந்ததை உறுதிப்படுத்தியது.

தோட்டங்களின் தேசியமயம் மலையகத்தின் தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை, முக்கியமாக மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலளார்களைப் பொறுத்தவரை, அவர்களைத் தோட்டங்களில் இருந்து அகற்றும் ஒரு நோக்கத்தையும் கொண்டிருந்தது. தோட்டத் தொழிலாளர்கள் தோட்டங்களுக்குள்ளேயே பச்சையான இனத் துவேஷங்கட்கு முகங்கொடுத்தார்கள். தோட்டங்களுக்குள் இனவாதக் காடையர்கள் புகுந்து கட்டற்ற வன்முறையில் ஈடுபட்டனர்.

இவற்றையெல்லாம் பொறுத்துக் கொண்டு தோட்டத்தொழிலாளர்கள் அங்கு சீவித்தபோதும் தோட்ட நிருவாகத்தின் சீர்குலைவுகள் மிகப்பெரிய சவாலாயின. இதனால் ஒழுங்காகச் சம்பளம் கிடைப்பதே சவாலானதாக இருந்தது. இந்நிலையில் 1974இல் ஏற்பட்ட வறட்சி தேயிலைப் பயிரை மிகவும் பாதித்தது. அதன் பயனாகத் தோட்டங்களில் வாராந்த வேலை நாட்களின் எண்ணிக்கை மிகவும் குறைவடைந்தது. பல இடங்களில் பேரினவாத வன்முறையைவிட முக்கியமாக, வருமானம் போதாமை மலையகத் தமிழரை வாழ்வுத் தேடித் தோட்டங்கட்கு வெளியே விரட்டியது. ஒருபகுதியினர் இந்தியாவுக்குத் திரும்பிச் செல்ல முயன்றனர். இன்னொரு பகுதியினர் வடக்கில் கிளிநொச்சி, வவுனியாப் பகுதிகளில் வேகமடைந்து வந்த விவசாய விருத்தியை நம்பித் தோட்டங்களிலிருந்து வடக்கே புலம்பெயர்ந்தனர்.

வடக்கு நோக்கி வந்த மலையகத் தமிழரை முழு மனதுடன் வரவேற்றுக் குடியேற்றுவதில் அக்கறையுடைய தமிழ்த் தேசியவாதிகள் சிலர் இருந்தனர். குறிப்பாக 'காந்தியம்' என்ற அமைப்பு அவற்றில் முக்கியமானது. இன்றும் காந்தியத்தால் பயனடைந்த மக்கள் அதை நன்றியுடன் நினைவு கூர்வர். ஆனால், வடக்கு நோக்கி வந்த அனைத்து மலையகத் தமிழர்களின் அனுபங்களும் இவ்வாறு நல்ல நினைவுகளைச் சுமந்தவை அல்ல.

1972க்குப் பிறகு அந்நியச் செலாவணி பிரச்சினையால் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் அரசாங்கம் வெங்காயம், கிழங்கு, செத்தல் மிளகாய் போன்ற பல உணவுப் பொருட்களின் இறக்குமதியைத் தடைசெய்தது. இந்த வாய்ப்பான சூழ்நிலையில் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு வெளியே கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் பெருமளவில் பயிர்செய்கையில் ஈடுபட்டவர்கள் புதிய செல்வந்தர்களாயினர். இவர்கள் புதிய நிலப்பிரபுக்களாகத் தோற்றம் பெற்றனர். இவர்கள் மலையகத்திலிருந்து வந்த தொழிலாளர்களை தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்த முயன்றனர்.

இந்த புதிய நிலப்பிரபுகள் அவர்களுடைய மலிவான கூலி உழைப்பை மலிவாகக் கூலிக்குச் சுரண்டுவதிலே கண்ணுங்கருத்துமான இருந்தனர். தோட்டங்களில் இருந்து வெளியேறியவர்களை, 'கள்ளத் தோணிகள்' என்று பொலிஸில் பிடித்துக் கொடுக்கப் போவதாக மிரட்டுவது உட்படப், பலவாறான வழிகளில் மலையகத் தொழிலாளர்கள் அச்சுறுத்தப்பட்டும் உரிமை மறுக்கப்பட்டும் வாழ்ந்தனர். குறட்டத்தட்ட ஒரு அடிமை வாழ்க்கையை வடக்கு நோக்கிப் புலம்பெயர்ந்த மலையகத் தமிழரில் பெரும்பான்மையானோர் வாழ்ந்தனர். ஒருபுறம் 'சிங்களவன் எம்மை ஒடுக்குகிறான்' என்று கோஷமிடுபவர்கள் தாம் ஒடுக்கப்படுவதை விட மிக மோசமாக ஒடுக்குமுறையைச் செய்பவர்களாயினர்.

இந்த ஒடுக்கு முறையை எதிர்த்து எழுந்த குரல்கள் மிகக்குறைவு. குறிப்பாக ஈழத்தமிழர் அமைப்புக்களில் இதுவொரு முக்கிய பேசுபொருளாகவில்லை. ஒடுக்கப்படுகின்ற இனமாக எம்மைக் காண்கிற நாம் மலையகத் தொழிலாளர்களை ஒடுக்குவது நியாயமாகாது என்று ஓங்கிக் குரல்கொடுக்க அனைவரும் தயங்கினர். இது தமிழ்த்தேசியத்தின் இரட்டை நிலைப்பாட்டையும் தமிழ்த் தேசியத்தின் தலைவர்கள் எனத் தம்மை அழைத்துக்கொண்ட உயர்வர்க்க ஆதிக்க சக்திகளே என்பதையும் காட்டி நின்றது.

சிங்களப் பேரினவாதத்தின் செயற்பாடுகள் 1970களின் பிற்பகுதியில் வலுப்படத் தொடங்கியிருந்தன. முஸ்லிம் கட்சிக்கெதிரான சில வன்செயல்கள் நடந்தன. எனினும், புத்தளத்தில் 1976இல் ஏற்பட்ட ஒரு பெரிய மோதலை அரசாங்கம் பரவாமல் தடுத்தது. இதனால் முஸ்லிம்களுக்கும் சிங்களவருக்கும் இடையிலான மோதல் தவிர்க்கப்பட்டது. ஆனால், இதே கட்டுப்பாட்டை அரசாங்கம் மலையகத்தில் பேணவில்லை.

இந்தக் காலப்பகுதியில் பேரினவாதம் வளர்ச்சியடைந்து மலையகத் தமிழரை முதலாவதாகக் குறிவைத்தது என்றே சொல்லலாம். மலையகத்தில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களுக்கும் தோட்ட நிலங்களில் சிங்கள குடியேற்ற கிராமங்களை நிறுவவும் பேரினவாதத்தின் எழுச்சி வாய்ப்பானது. ஆனால், மலையகத் தொழிலாளர்கள் இதற்கெதிராகப் போராடினார்கள். 1977இல் சிவனு இலட்சுமணன் என்ற இளம் தொழிலாளியின் உயிர் தியாகத்தின் மூலம் இத்தகைய திட்டமிடப்பட்ட ஒரு சிங்கள குடியேற்றம் டெவன் தோட்டத்தில் முறியடிக்கப்பட்டமை மலையகத் தொழிலாளரின் போராட்டத்தின் முக்கிய ஒரு மைல் கல்லாகும். இது வடபுலத்தில் மட்டுமன்றி மலையகத்திலும் பேரினவாத எழுச்சிக்கு எதிரான போராட்டங்கள் வலுப்பட்ட ஒரு காலமாகும்.

இவ்வாறு வடபுலத்திலும் மலையகத்திலும் பேரினவாதத்திற்கு எதிரான போராட்டங்கள் வலுப்பெற்ற போதும் அதுவொரு இணைந்த போராட்டமாக வளர்ச்சியடையவில்லை. பாராளுமன்றக் கதிரைகள் மீதான ஆர்வம் வலிய மக்கள் இயக்கமொன்றைக் கட்டுவதைத் தடுத்தது. மாறாக அரசியற் தலைமைகள் மக்களை தங்களுக்குச் சார்பாக வாக்களிக்கக்கூடிய வாக்காளராக மட்டுமே இருக்கவேண்டும் என்று விரும்பின. இது மலையத்திலும் வடபுலத்திலும் நடந்தது. இதன் பலன்களை இன்றுவரை அம்மக்கள் அனுபவிக்கின்றனர்.

ESOFT முனைவர்

# கற்கைகள் அறிமுகம்



ESOFT Metro Campus, தனது இரு புகழ்பெற்ற முனைவர் கற்கைகளை அறிமுகம் செய்துள்ளது. இந்த அறிமுக நிகழ்வு அண்மையில் One Galle Face Business Tower இல் அமைந்துள்ள அதன் Premier Campus One கிளையில் நடைபெற்றது.

இலங்கையில் வழங்கப்படும் முதலாவதும் ஒரே பிரத்தானிய PhD கற்கையாக இந்த அறிமுகம் அமைந்திருப்பதுடன், கிங்ஸ்டன் பல்கலைக்கழகத்தினால் இந்தக் கற்கை வழங்கப்படுகின்றது. Doctor of Business Administration (DBA) கற்கையை Manipal GlobalNXT பல்கலைக்கழகத்துடன் இணைந்து வழங்க ESOFT முன்வந்துள்ளது.

ESOFT இன் தவிசாளர்/குழும முகாமைத்துவ பணிப்பாளர் மற்றும் ஸ்தாபகர், கிங்ஸ்டன் பல்கலைக்கழகத்தின் சிவில் பொறியியல் மற்றும் பீடாதிபதி மற்றும் கல்விப் பங்காண்மைகளுக்கு பொறுப்பதிகாரியுமான பேராசிரியர் முகேஷ் லிம்பாச்சியா மற்றும் Manipal GlobalNxt பல்கலைக்கழகத்தின் கூட்டாண்மை ஈடுபாடுகள் மற்றும் பங்காண்மைகளுக்கான தலைமை அதிகாரி சஞ்ஜீவ் குமார் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். அத்துடன், இரு கற்கைகளுக்குமான பிரதிநிதிகள் மற்றும் மேற்பார்வையாளர்களும் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

இலங்கையில் உயர் தரம் வாய்ந்த முனைவர் கற்கைகளை அணுகும் வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான ESOFT இன் அர்ப்பணிப்பு இந்த அறிமுகத்தினூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த புதிய கற்கைகளினூடாக, நிபுணர்களுக்கு கற்கைகளை சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட PhD மற்றும் DBA தொடர்வதற்கான வாய்ப்பை வழங்குவதுடன், தாம் தெரிவு செய்த பிரிவுகளில் சிறப்பாக செயலாற்றுவதற்கு அவசியமான அறிவையும் நிபுணத்துவத்தையும் வழங்குவதாக அமைந்துள்ளது.

# Ex-Pack சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டம்



அபர்தீன் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிடெட் நிறுவனத்தின் துணை நிறுவனமாக திகழும் Ex-Pack Corrugated Cartons PLC, சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, 'Inspire Inclusion' நிகழ்ச்சியை அண்மையில் முன்னெடுத்திருந்தது. பெண்களுக்கு வலுவூட்டலுக்கான நிறுவனத்தின் ஒப்பற்ற அர்ப்பணிப்பை வெளிப்படுத்தி, இந்த ஆண்டின் சர்வதேச தொனிப் பொருளுக்கமைவாகவும் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த தினத்தன்று நிபுணத்துவ மற்றும் தனிப்பட்ட வளர்ச்சியில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற புகழ்பெற்ற பிரத்தியேக பயிற்றுவிப்பாளரான தீப்தி பெரேராவினால் கருத்தரங்கு தொடர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பணி-வாழ்க்கை சமநிலை மற்றும் பெண்களுக்கு வலுவூட்டல் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பில் இவரின் விளக்கங்கள் அமைந்திருந்தன. தனிப்பட்ட தன்னிறைவுடன் நிபுணத்துவ வெற்றியை சமநிலைப்படுத்திக் கொள்வதற்கான உறுதியான நுட்பங்களை பங்கேற்றிருந்தவர்களுக்கு வழங்கியிருந்தது. ஊக்கமளிக்கும் அவரின் வெளிப்படுத்தலினூடாக, வாழ்க்கையின் சகல கட்டங்களிலும் திறன்களை பயன்படுத்தவும், சமத்துவத்தை நோக்கி நகரவும் ஊக்கமளிக்கப்பட்டிருந்தது.

பெண்கள் பெருமளவில் பணிக்குழுவில் இணைந்து கொள்வதுடன், ஆக்கத்திறன், சமூகங்கள் மற்றும் பொருளாதாரத்திலும் அதிகம் பங்களிப்பு வழங்குகின்றனர். எவ்வாறாயினும், இது தொடர்வதற்கு, ஒவ்வொருவரும் இணைந்து பணியாற்ற வேண்டியுள்ளது. உள்ளடக்கத்தில் ஒருவருக்கு ஒருவர் முன்மாதிரியாக இருந்து ஊக்குவிப்பதாக இருக்க வேண்டும். அனைவரும் பங்கேற்காவிடின் பாலின சமத்துவம் என்பதை சாத்தியப்படுத்திக் கொள்ள முடியாது என்பது இந்த ஆண்டின் செயலுக்கான அழைப்பாக அமைந்திருந்தது.

தனது பெண் ஊழியர்களுக்கு ஆதரவளிப்பது மற்றும் ஊக்குவிப்பதற்கான வாய்ப்பாக இதனை Ex-Pack பயன்படுத்தியிருந்தது. பாரம்பரியமாக ஆண்களால் ஆதிக்கம் செலுத்தப்படும் நிறுவனத்துக்கும், தொழிற்துறைக்கும் அவர்கள் ஆற்றும் பங்களிப்பை பெரிதும் மதித்து வரவேற்றிருந்தது. ஒவ்வொரு தனிநபரும் தாம் பெறுமதி வாய்ந்தவராகவும், சிறந்த நிலையில் பங்களிப்பு வழங்குவதற்கு வலுவூட்டப்பட்டவராகவும் திகழ்வதற்கு ஆதரவளிக்கும் சூழலை ஏற்படுத்தி, உள்ளடக்கமான மற்றும் சமத்துவமான பணிக் கலாசாரத்தை ஏற்படுத்துவது எனும் Ex-Pack இன் பரந்த கொள்கையின் ஒரு அங்கமாக இது அமைந்துள்ளது.

பெண்களுக்கு வலுவூட்டுவது என்பது அறமுறையான மற்றும் ஒழுக்கம் சார்ந்த விடயமாக மாத்திரமாக அமைந்திராமல், மூலோபாய ரீதியில் முக்கியமானது என்பதில் Ex-Pack நிர்வாகம் நம்பிக்கை கொண்டுள்ளது. அதன் DEI கொள்கைகள் மற்றும் செயற்பாடுகள் போன்றன சகல முறையிலும் பன்முகத்தன்மையை ஊக்குவித்து, திறந்த தொடர்பாடலை மேம்படுத்தி, பாகுபாடு மற்றும் ஓரவஞ்சனைகளை இல்லாமல் செய்வதாக அமைந்துள்ளது. இந்த செயற்பாட்டினூடாக, நிறுவனத்துக்கு பரந்தளவில் இயங்கவும், புத்தாக்கத்தை முன்னெடுத்துச் செல்லவும், 300க்கும் அதிகமான உறுதியான ஊழியர்கள் மத்தியில் தமது உரித்துடைமை உணர்வை கட்டியெழுப்பவும் முடிந்துள்ளது.

'Inspire Inclusion எனும் தொனிப்பொருளில் உலகளாவிய ரீதியில் சர்வதேச மகளிர் தினம் 2024 அனுஷ்டிக்கப்பட்ட நிலையில், அதிகளவு சமத்துவ மற்றும் உள்ளடக்கமான சமூகங்களைக் கட்டியெழுப்பும் முயற்சிகளுடன் Ex-Pack இன் செயற்பாடுகளும் பொருந்தும் வகையில் அமைந்துள்ளன. பெண்களுக்கு வலுவூட்டுவது மற்றும் உள்ளடக்கத்தை ஊக்குவிப்பது தொடர்பில் நிறுவனம் தொடர்ச்சியாக காண்பித்து வரும் செயற்பாடுகளினூடாக, அதன சகல ஊழியர்களுக்கும் அதிகளவு சமத்துவமான எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கான அடித்தளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆசியாவிலும் இலங்கையிலும் பணியாற்றுவதற்கு சிறந்த நிறுவனங்களில் ஒன்றாக Ex-Pack Corrugated Cartons PLC தொடர்ச்சியாக தரப்படுத்தப்பட்டிருந்தது. நிறுவனம் ISO 9001-2015, ISO 14001-2015, FSC COC, WRAP தரச் சான்றிதழ்களைப் பெற்றுள்ளதுடன், காபன் நடுநிலை சான்றிதழையும் பெற்றுள்ளது. NCE ஏற்றுமதி விருதுகள், CNCI விருதுகள், லங்கா ஸ்டார் விருதுகள், NBE விருதுகள், லங்கா CSR விருதுகள் மற்றும் கிறீன் விருதுகள் போன்றவற்றில் பல்வேறு விருதுகளையும் வென்றுள்ளது.

புகையிரத டிக்கட் பதிவு

# இலகுவாக்கப்பட்டுள்ளது

SLT-MOBITEL, இலங்கை புகையிரத திணைக்களத்துடன் இணைந்து, வாடிக்கையாளர்கள் மற்றும் அரசாங்க ஊழியர்களுக்கு புகையிரத ஆசனங்களை பதிவு செய்யும் செயன்முறையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. அதனூடாக பதிவுகளை மேற்கொள்பவர்களுக்கு பெருமளவு சௌகரியத்தையும், நேரத்தை மீதப்படுத்திக் கொள்ளும் வசதியையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சகல வசதிகளையும் கொண்ட புதிய டிஜிட்டல் கட்டமைப்பில் E-Ticket மற்றும் E-Warrant தீர்வுகள் அடங்கியுள்ளன.

இந்தத் தீர்வுகளினூடாக, வாடிக்கையாளர்கள், சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுவான பயணிகள் சௌகரியமான முறையில் தமது புகையிரத டிக்கட்டை புதிய E-Ticketing தீர்வினூடாக பதிவு செய்து கொள்ள முடியும். மேலும் அரச ஊழியர்களுக்கும் பிரத்தியேகமான E-Warrant தீர்வினூடாக பதிவு செய்து கொள்ளலாம். முன்னர் ஒன்லைனில் ஆசனப் பதிவை மேற்கொண்டதன் பின்னர் புகையிரத நிலையத்துக்கு அல்லது அதற்கான சேவைப் பகுதிக்கு பயணிகள் விஜயம் செய்து டிக்கட்டின் அச்சுப்பிரதியை பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், E-Ticket அறிமுகத்துடன், வாடிக்கையாளர்களுக்கு தமது முழு ஆசனப் பதிவு செயன்முறையை ஒன்லைனில்



மேற்கொண்டு டிக்கட்டை தமது கையடக்க தொலைபேசியில் பெற்றுக் கொள்ள முடியும்.

இதனூடாக, புகையிரத நிலையங்கள் அல்லது சேவை நிலையங்களுக்கு விஜயம் செய்ய வேண்டிய தேவை இல்லாமல் செய்யப்பட்டுள்ளதுடன், அச்சிடப்பட்ட டிக்கட்களை கொண்டு செல்ல வேண்டிய தேவையும் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. பயணிகள் தமது ஆசனப் பதிவை உறுதி செய்ததும், அவர்களின் ஸ்மார்ட்ஃபோன்களில் QR குறியீட்டுடனான E-Ticket வழங்கப்படும். இதனை தமது பயணத்தின் போது காண்பிக்க முடியும்.

# இதழோரத் தித்திப்பு

பொன்னந்தி
கரைசலிலிருந்து
மையிட்ட வானத்தின்
கண்களை
தேடுகிறேன்
எப்போதுமில்லாமல்
நீ தந்திருக்கும்
இந்த தெளிந்த
தேநீரில்
இரண்டேயிரண்டு
கருநிற துகள்கள்
எப்போதும் போல
குவளையின்
வளைபரப்பின்
எதிரெதிர்
முனைகளில்...





லலித்தா

# எதிலே உணர்வு



சினிமாவால் சீரழியும் சிலபேர்
செய்வதனை நினைத்தாலே விழிநீர்
அனியாயம் அறிவற்ற இவர்கள்
ஆக்குகிறார் புரியாத புதிர்கள்...

நடிகர்தான் இவர்களது வழிகாட்டி
நடிகருக்கே இவர்கள்தான் கொடிகாட்டி
பாதையிலே நடிகர்களின் படங்கட்டி
பாலூற்றிப் பூசைசெய்யும் பாம்பாட்டி...

உழைப்புக்காய் நடிக்கின்றான் பரதேசி
உண்மையினை விளங்காத எம்மூதேவி
எடுப்புக்காய் நீசெய்பவற்றை முதல்யோசி
எனக்கிப்போ தெரிகிறது நீயோர் தூசி...

கோடியுழைத்து வாழுகின்றான் நடிகன்
கொஞ்சமாதல் கொடுக்க மாட்டான் பலதமிழன்
கோவிலையும் சாமியையும் பழிப்பான்
அத்திருடன்அவனைக் கொண்டாடி
மகிழுவான் எம் இளைஞன்...

வாளெடுத்து விசுகிறான் படத்தில்
ஆளெவரும் அழிவதில்லை நிஜத்தில்
பாழெடுக்கும் வாள்களினால் பயத்தில்
பயத்தோடு படுக்கின்றார் பலர்யாழில்...

வழிகாட்டி யாரென்று புரியாமல்
வளர்கின்ற சமுதாயம் எதிர்காலம்
மொழிகாட்டிக் கலைவளர்க்க முனைந்தால்
குழிதோண்டிப் புதைப்பதாயே இருக்கும்...

தமிழ்வளரப் பாடுபட்ட கலைஞர்களோ
தம்மினம் வளரப் பாடுபட்ட தலைவர்களோ
இவ்விளம் சமூகம் உணராது இருப்பதாலோ
பணமுழைப்போர் படங்களுக்கே
பால்வார்ப்பு...

– நீலையூர் சுதா



# பேரெழில் பதுமை

திருத்தத் திருத்தத்தான்
உறுத்துகின்றது
என் இரு கண்களை
உன் அழகு

திரும்பிப் பார்
தளவாடியில் குறை

இரண்டு கண்ணாடி
வரம் உனக்கு
ஒளி பட்டுத் தெறிக்கும்
தவம்

ஆடைகளை சரி செய்வதை
நிறுத்தும் போது
அனிச்சையாக வரும்
பார்வை கோளாறு
ஆண்களுக்கு
நீ திருத்திக் கொண்டே
இரு
நான் காதலில்
பிறவிக் குருடன்



– இரவிகாந்தன்

# சாதியிலே மதங்களிலே

கோடிக்கூப்பிட்டு போட்டாலும்
கோபுர கோயில்கள் தலை நிமிர்ந்து
பார்க்காத ஒரு கூட்டம்...

கிளிப்பிள்ளைக்கு கீழ் வண்ணார்
என்ற அந்தஸ்தில் திரைக்கு பின்
பாடம் புகட்டும் ஆசான்கள்...

அறிவு வளர கல்லடி சொல்லடி
பட்டு அரச இயல் படைக்கும்
நிபுணர் ஆனார் டாக்டர் அம்பேத்கர்...

புதுமை பெண்ணை கற்பனையால் இன்றி,
தேசந்தேரும் நனவாக்கினான்
மீசைக்கு ஓர் கவிஞன் பார(தீ)தி ...

உறங்கும் இலக்கியங்களின்
வரலாற்று பின்னணி
தூசித்தட்டபட வேண்டிய ஒன்று

இல்லாவிட்டால் தகுதி,தரம்,
தாற்பாரிய பண்பாடு
ஒழிக்கப்பட்டதாய் ஆகி விடும்...

ஜீவகாற்று செல்லும் பாதை
மனிதனுக்கு எங்கும் ஆரம்பம் தான்
அதை மறந்தால் மனிதனில்லை.



– வியாத்தன்




‘Sri Lankan Artists 2024’

# கண்காட்சி முன்னெடுப்பு

ஜோர்ஜ் கீற் அறக்கட்டளையினால் ஏற்பாடு செய்யப்படும் ‘Sri Lankan Artists 2024’ கண்காட்சி, ஆறு ஆண்டுகளின் பின்னர் இம்முறை மீண்டும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கண்காட்சியின் மாபெரும் அங்குரார்ப்பண நிகழ்வு 2024 மார்ச் 22ஆம் திகதி கொழும்பு ஜேடீஉ பெரேரா கெலரியில் முன்னெடுக்கப்பட்டு, மார்ச் 26ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறும்.

ஜோர்ஜ் கீற் அறக்கட்டளையின் ‘Sri Lankan Artists 2024’ கண்காட்சி என்பது தேசத்தின் கலைச் சிறப்பை கொண்டாடுவது மாத்திரமன்றி, வளர்ந்து வரும் கலைஞர்களின் திறமைகளை ஊக்குவித்து கொண்டாடும் வகையிலும் அமைந்துள்ளது. அரசாங்கத்துடன் கைகோர்ப்பது தொடர்பான எதிர்காலத் திட்டத்தைக் கொண்டுள்ள இந்தக் கண்காட்சி, வெளிநாடுகளில் கலைச் சந்தைகளை முன்னெடுத்து இலங்கையின் கலைஞர்களை சர்வதேச மட்டத்தில் கொண்டு செல்வதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பிலும் கவனம் செலுத்துகின்றது.

“ஆண்டின் சிறந்த கலைஞர்” எனும் விருது இந்த கண்காட்சியின் முக்கிய அங்கமாக அமைந்திருக்கும். இதற்காக 60க்கும் அதிகமான விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததுடன், அதிலிருந்து 10 சிறந்த கலைஞர்களான அசேல அபேவர்தன, சன்ன ஏக்கநாயக்க, சமிந்த கமகே, சத்துரிகா ஜயனி, தில்லை ஜோசப், சிவசுப்ரமணியம் கஜேந்திரன், பிரகீத் ஏக்கநாயக்க, மொஹமட் தாஜுடீன் பாதிமா ருக்ஷானா, பிரதீப் தல்வத்த மற்றும் டபிள்யு. நயனநந்த விஜயகுலதிலக ஆகியோர் அடங்கியிருப்பதுடன், இவர்களின் ஆக்கங்கள் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படுவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

“ஆண்டின் சிறந்த கலைஞர்” எனும் விருதுக்கான தெரிவு மற்றும் பெருமைக்குரிய “ஞாபகார்த்த விருது” ஆகியவற்றுக்கு அறக்கட்டளையின் ஸ்தாபகர்களான சீதா டி சில்வா மற்றும் செட்ரிக் டி சில்வா ஆகியோரின் நினைவாகப் பெயர் வைக்கப்பட்டுள்ளது. கட்டடக் கலைஞரான பாலிந்த கன்னங்கர, சுயாதீன கலைஞரான அனோமா விஜேவர்தன மற்றும் பிரிட்டிஷ் கவுன்சில் ஸ்ரீலங்காவின் இலங்கைக்கான பணிப்பாளர் ஓர்லான்டோ எட்வர்ட்ஸ் ஆகியோர் சுயாதீன நடுவர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.


நாட்டின் செழுமையான கலாசார பாரம்பரியத்தைக் கொண்டாடுவதற்கான அறக்கட்டளையின் அர்ப்பணிப்பாக இந்தத் திட்டம் அமைந்துள்ளது. சர்வதேச களத்தை ஏற்படுத்திக் கொடுப்பதனூடாக, இலங்கையின் கலைத் திறமைகளைச் சர்வதேச மட்டத்துக்குக் கொண்டு செல்வதற்கு அறக்கட்டளை எதிர்பார்க்கின்றது. தேசத்தின் ஆக்கத்திறமைச் சிறப்பை உலகளாவிய ரீதியில் ஊக்குவிப்பதற்கான அறக்கட்டளையின் உறுதியான அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதாக இந்தக் கண்காட்சி அமைந்திருக்கும்.

இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சியின் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஹேமந்த குணதிலக கலந்து கொள்வார். இந்தக் கண்காட்சி ஆரம்பிக்கப்பட்டது முதல் அதன் அனுசரணையாளராக நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி திகழ்கின்றது. இலங்கையில் கலைத்திறமையை மேம்படுத்துவதில் ஒப்பற்ற ஆதரவை வழங்கும் கூட்டாண்மை அமைப்பாக வங்கி நன்மதிப்பைப் பெற்றுள்ளதுடன், இந்தக் கண்காட்சி வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதை உறுதி செய்வதில் முக்கிய பங்காற்றியுள்ளது.

கலைப் படைப்புகளின் விற்பனையிலிருந்து கிடைக்கும் சகல வருமதிகளும், பங்கேற்கும் கலைஞர்களின் நலனுக்காக நேரடியாக பங்களிப்புச் செய்யப்படும். அதனூடாக உள்நாட்டு திறமைசாலிகளின் திறமைகளை கட்டியெழுப்புவதில் நிகழ்வு காண்பிக்கும் அர்ப்பணிப்பு மேலும் உறுதி செய்யப்படுகின்றது.

மேலும், கலை ஆர்வலர்கள் மற்றும் கொள்வனவாளர்களுக்கு, பொது மக்கள் பார்வைக்காக கண்காட்சி ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாக மார்ச் 22ஆம் திகதி தமக்குப் பிடித்த தயாரிப்புகளைக் கொள்வனவு செய்து கொள்வதற்கான விசேட வாய்ப்பும் வழங்கப்படும்.

ஜோர்ஜ் கீற் அறக்கட்டளையின் -Sri Lankan Artists 2024- கண்காட்சியினூடாக இலங்கையின் கலை தொடர்பான வெளிப்பாடுகளைப் பரந்தளவில் காட்சிப்படுத்துவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.




## அரசாங்கம் மீதான மக்களின் அங்கீகாரம் பெப்ரவரி மாதத்தில்

# 7% ஆக குறைந்துள்ளது

**சமீபத்திய ‘தேசத்தின் மனநிலை’ கருத்துக்கணிப்பு மக்களின் நம்பிக்கையில் கடுமையான எதிர்மறை சரிவைக் காட்டுகிறது**

வெரிட்டே ரிசேர்ச்சின் கேலப் பாணியிலான (Gallup style) சமீபத்திய ‘தேசத்தின் மனநிலை’ கருத்துக் கணிப்பின்படி, 2023 ஒக்டோபர் மாதத்தில் 9% ஆக இருந்த அரசாங்கம் மீதான மக்களின் அங்கீகாரம் 2024 பெப்ரவரியில் 7% ஆகக் குறைந்துள்ளது.

> **நாடளாவிய ரீதியில் தனித்தனி குடும்பங்களில் இருந்து வயது வந்த இலங்கையர்கள் 1,044 பேரைக் கொண்ட பதில் மாதிரியை அடிப்படையாகக் கொண்டு, 2024 பெப்ரவரி 16 முதல் 25 வரை இந்தக் கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது**

தற்போதைய பொருளாதாரம் சிறப்பாக உள்ளது அல்லது நல்ல நிலையில் உள்ளது என 9 சதவீதமானவர்கள் மட்டுமே மதிப்பிட்டதாகக் கணக்கெடுப்பு சுட்டிக்காட்டுகிறது. இது 2023 அக்டோபரில் 16 சதவீதமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டின் பொருளாதார நிலைமைகள் மோசமடைந்து வருவதாக 90% கருதுகின்றனர், அதேவேளை, 2023 அக்டோபரில் 66% மட்டுமே இவ்வாறான எதிர்மறையான பார்வையைக் கொண்டிருந்தனர்.

### அரசாங்கம் மீதான அங்கீகாரம் 7%

“தற்போதைய அரசாங்கம் செயல்படும் முறையை நீங்கள் அங்கீகரிக்கிறீர்களா அல்லது மறுக்கிறீர்களா?” என்ற கேள்விக்கு, பதிலளித்தவர்களில் 7% (கிட்டத்தட்ட 7.5%) தாங்கள்ஏற்றுக்கொள்வதாகக் கூறியுள்ளனர் (1.81% பிழை வரம்புடன்). அரசாங்கம் செயல்படும்முறையை நிராகரிப்பதாகக் கூறிய சதவீதம் 85% ஆகும். அரசாங்கம் மீதான அங்கீகார மதிப்பீடு 2022 ஜூன் மாதத்திற்குப் பிறகு தற்போது மிகக் குறைந்த புள்ளியை எட்டியுள்ளது.

### பொருளாதார நிலைமைகள் மதிப்பீடு மோசமானது: 91%

“நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைகளை சிறப்பு, நன்று அல்லது மோசம்” என மதிப்பிடுமாறு கேட்டபோது, மோசமாக உள்ளது என 91% கூறியுள்ளனர் (பிழை வரம்பு 1.94%). இது 2023 ஜூனில் 73% மற்றும் 2023 அக்டோபரில் 81% ஆக இருந்த எதிர்மறை மதிப்பீட்டை விட அதிகரித்த மதிப்பீட்டு நிலையாகும்.

> **பொருளாதார நிலைமைகள் மோசமடைந்து வருவதாக நினைக்கும் சதவீதம் 2023 அக்டோபரில் 66% ஆக இருந்து, தற்போது 90% ஆக அதிகரித்துள்ளது. 2023 அக்டோபரில் உறுதியான கருத்தைத் தெரிவிக்காதவர்கள் தற்போது பொருளாதாரம் மோசமடைந்து வருகின்றது என்ற கருத்தை ஆமோதிக்கின்றனர்**

### பொருளாதாரக் கண்ணோட்டம் மேம்பட்டுவருகின்றது: 9%

“ஒட்டுமொத்தமாக நாட்டின் பொருளாதார நிலைமைகள் மேம்பட்டு வருகின்றதா அல்லது மோசமடைந்து வருகின்றதா?” என்ற கேள்விக்கு, பொருளாதாரம் சிறப்படைந்து வருவதாக பதிலளித்தவர்களில் 9% நம்புகின்றனர் (1.91% பிழை வரம்புடன்). இது 2023 அக்டோபரில் 8% ஆக இருந்தது. இருப்பினும், பொருளாதார நிலைமைகள் மோசமடைந்து வருவதாக நினைக்கும் சதவீதம் 2023 அக்டோபரில் 66% ஆக இருந்து, தற்போது 90% ஆக அதிகரித்துள்ளது. 2023 அக்டோபரில் உறுதியான கருத்தைத் தெரிவிக்காதவர்கள் தற்போது பொருளாதாரம் மோசமடைந்து வருகின்றது என்ற கருத்தை ஆமோதிக்கின்றனர்.

### கருத்துக்கணிப்பை நடைமுறைப்படுத்தல்

வழக்கமாக நடத்தப்படும் இக்கருத்துக் கணிப்பு வெரிட்டே ரிசேர்ச்சின் Syndicated Surveys கருவியின் ஒரு பகுதியாகும். வாக்களிப்பு பங்காளியாக வான்கார்ட் சர்வே (பிரைவேட்) லிமிடெட் செயற்படுகிறது. இதன்மூலம் இலங்கையர்களின் கருத்துகளை ஆய்வு செய்ய மற்ற நிறுவனங்களுக்கு வாய்ப்பு கிடைக்கிறது.

நாடளாவிய ரீதியில் தனித்தனி குடும்பங்களில் இருந்து வயது வந்த இலங்கையர்கள் 1,044 பேரைக் கொண்ட பதில் மாதிரியை அடிப்படையாகக் கொண்டு, 2024 பெப்ரவரி 16 முதல் 25 வரை இந்தக் கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது. இக்கணக்கெடுப்புக்கான மாதிரி மற்றும் முறையானது, 95% நம்பிக்கை இடைவெளியில் 3.03%க்கும் குறைவான அதிகபட்ச பிழை வரம்பைக் கட்டுப்படுத்தும் வகையில் ஆய்வுகளின் தங்க நியம விதிகளைச் சந்திக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## வெப்பநிலை தொடர்பில்

# ஐநா சிவப்பு எச்சரிக்கை

இந்தாண்டில் (2024) வெப்பநிலை அதிகமாக இருக்கும் என ஐநாவின் காலநிலை மாற்ற நிறுவனம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும், கடந்த 200 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கடந்த ஆண்டு பெப்ரவரி முதல் தற்போது வரை, புவியின் சராசரி வெப்பநிலை 1 புள்ளி 45 டிகிரி செல்சியஸ் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது மிகவும் மோசமான நிலையை நோக்கி செல்வதாக கவலை தெரிவித்துள்ள இந்நிறுவனம், வெப்பநிலை அதிகரிப்பால், பனிப்பாறைகள் உருகி, கடல்மட்டத்தின் அளவு உயரும் என்றும் எச்சரித்துள்ளது.

இதே நிலை நீடிக்கும் பட்சத்தில், 100 கோடிக்கும் அதிகமான மக்கள் காலநிலை மாற்றத்தால் வரும் காலங்களில் பாதிக்கப்படுவார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளது.



அவுஸ்திரேலியா

## கடுமையான விதிகளுடன்

# அவுஸ்திரேலிய விசா

வெளிநாட்டு மாணவர்களுக்கான விசா விதிகளை கடுமையாக்க அவுஸ்திரேலிய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, இந்த வாரத்திலிருந்து விதிகள் கடுமையாக்கப்படும் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்வோரின் எண்ணிக்கை




வெகுவாக அதிகரித்துள்ளதால் அவுஸ்திரேலிய அரசாங்கம் இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தகையில், பட்டதாரி விசா மற்றும் மாணவர் விசாக்களுக்கான ஆங்கில மொழித் தேவை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, விதிகளை மீறும் நிறுவனங்களின் செயற்பாடுகளை இடைநிறுத்துவதற்கு அவுஸ்திரேலிய அரசாங்கத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

ரஷ்யா

## புட்டின் உடன் பேச்சு வேண்டாம்

# நவால்னியின் மனைவி கோரிக்கை


புட்டின் உடன் பேச்சு நடத்த வேண்டாம் என உயிரிழந்த நவால்னியின் மனைவி, உலக தலைவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ரஷ்யாவில் நடந்த ஜனாதிபதி தேர்தலில், விளாடிமிர் புட்டின் அபார வெற்றி பெற்றதையடுத்து உலக தலைவர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

இதற்கிடையே தேர்தலுக்கு முன்பாக சிறையில் மரணமடைந்த எதிர்க்கட்சி தலைவர் அலெக்சி நவால்னியின் மனைவி யூலியா நவல்னயா, ஜனாதிபதி புட்டினுக்கு எதிராக தனது கணவரின் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதாக அறிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில்,

“தேர்தல் முடிவுகள் ஒரு பொருட்டல்ல. உலகில் யாரும் புட்டினை முறையான ஜனாதிபதியாக அங்கீகரிக்கவில்லை என்பதை நாங்கள் உறுதி செய்வோம். அவருடன் உலக தலைவர்கள் யாரும் பேச்சுவார்த்தைக்கு மேசையில் உட்கார வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் அவர் ரஷ்யாவின் முறையான ஜனாதிபதி அல்ல.



இதை நாங்கள் மற்றவர்களுக்கும் நிரூபித்துள்ளோம். அதோடு, ஒரு நாளைக்கு 15 நிமிடங்கள் அவரின் ஆட்சியை எதிர்த்துப் போராட மக்களை வலியுறுத்துகிறேன்.

நமக்கு அமைதியான, சுதந்திரமான மற்றும் மகிழ்ச்சியான ரஷ்யா தேவை. நாம் இணைந்து செயல்பட்டால் நிச்சயம் சாதிக்க முடியும்” எனத் தெரிவித்தார்.

தருமபுரி

# தோல்வி மன்னன் மனுத் தாக்கல்

தோல்வியையே இலக்காகக் கொண்டு 239ஆவது முறையாக தேர்தல் மன்னன் பத்மராஜன் மனுத் தாக்கல் செய்துள்ளார்

தமிழகத்தில் மக்களவை தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், தருமபுரி தொகுதியில் முதல் நபராக மேட்டூரைச் சேர்ந்த இவர் தனது வேட்பு மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

நாடு முழுதும் எங்கு தேர்தல் நடந்தாலும், அதில் போட்டியிடுவதை வழக்கமாக வைத்துள்ள இவர், இதுவரை ஒன்றில் கூட வெற்றி பெற்றது இல்லை. நாளடைவில் இதுவே ஒரு சாதனையாக மாறியுள்ளது.




தமிழ்நாடு

## இசைச் சகோதரிகளின்

# சர்ச்சை அறிக்கை

டி.எம்.கிருஷ்ணாவிற்கு விருது வழங்கிய இடத்தில் நாங்கள் பாட விரும்பவில்லை என கர்நாடக இசை சகோதரிகளான ரஞ்சனி, காயத்ரி ஆகியோர் சர்ச்சைக்குரிய அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

பிரபல கர்நாடக இசை பாடகர் டி.எம்.கிருஷ்ணாவிற்கு இந்த வருடத்திற்கான சங்கீத கலாநிதி விருது அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்கள் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

எம்.எஸ்.சுப்புலட்சுமி முதல் மதுரை மணி ஐயர், டிகே பட்டம்மாள், பால சரஸ்வதி, பாலமுரளி கிருஷ்ணா என பெரியபெரிய இசை ஜாம்பவான்கள் பெற்றுள்ள மிகப்பெரிய விருதுதான் மியூசிக் அகாடமி சார்பில் வருடந்தோறும் வழங்கப்படும் சங்கீத கலாநிதி விருது. இந்த விருது ஒஸ்காருக்கு சமமாக கருதப்படுகிறது. வரும் டிசம்பர் 15இல் இந்த விருது விழா நடைபெற உள்ளது.

அந்தவகையில், பாடகர் டி.எம்.கிருஷ்ணா, அந்த உயரிய விருதுக்கு தகுதியானவராக எமக்குத் தோன்றவில்லை.



அதனால் தவறான ஒரு நபருக்கு கர்நாடக இசைக்கான உயரிய விருது அறிவிக்கப்பட்டுள்ளது அதிர்ச்சி அளிப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த வருடத்திற்கான மியூசிக் அகாடமியின் மாநாட்டில் கலந்துகொள்வதில் இருந்தும், டிசெம்பர் 25 அன்று தங்கள் கச்சேரியை வழங்குவதில் இருந்தும் தாங்கள் விலகுவதாகவும் தெரிவித்துள்ளனர்.



## டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பிக்கிறது:

# இலங்கையை வீழ்த்துமா பங்களாதேஷ்

இலங்கை-பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியானது இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரை இலங்கையும், ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை பங்களாதேஷும் கைப்பற்றிய நிலையில், களத்துக்குள்ளும், வெளியேயும் கீரியும், பாம்பும் போலத் தோன்றும் இரண்டு அணிகளின் நிலை இத்தொடரிலும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எவ்வாறாயினும் பங்களாதேஷ் பக்கம் ஷகிப் அல் ஹஸன், முஷ்பிக்கூர் ரஹீம் இல்லாததுடன், இலங்கையில் திமுத் கருணாரத்ன, அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால், தனஞ்சய டி சில்வாவின் பிரசன்னம் இலங்கைக்கு சாதகத்தை வழங்குகிறது.

இலங்கையைப் பொறுத்த வரையில் பிரபாத் ஜெயசூரிய, லஹிரு குமார, ரமேஷ் மெண்டிஸ், சாமிக குணசேகர ஆகியோர் பந்து வீச்சாளர்களாக களமிறங்குவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

பங்களாதேஷைப் பொறுத்த வரையில் நியூசிலாந்துக்கெதிரான விளையாடிய அணியிலிருந்து முஷ்பிக்கூர், நுருல் ஹஸனை லிட்டன் தாஸ், ஸகிர் ஹஸன் ஆகியோர் பிரதியிடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மைலோ புட்போல் சம்ப்ஸ் 2024 – வட மாகாணத்தின்

# யாழ். தகுதிகாண் போட்டிகள் இன்று

மைலோ புட்போல் சம்ப்ஸ் 2024 - வட மாகாணத் தொடரின் யாழ்ப்பாண மாவட்டத்துக்கான 10, 12 வயதுட்பட்ட இரு பாலருக்குமான தகுதிகாண் போட்டிகளானவை துரையப்பா அரங்கில் இன்று நடைபெறவுள்ளது.

இதிலிருந்து ஒவ்வொரு பிரிவிலும் முதல் நான்கு இடங்களைப் பெறும் அணிகள், நாளை நடைபெறவுள்ள வட மாகாண இறுதிப் போட்டிகளுக்குத் தெரிவாகும்.



## இலங்கைக்கெதிரான முதலாவது டெஸ்டில்

# முஷ்பிக்கூரைப் பிரதியிட்ட ஹிரிடோய்

இலங்கைக்கெதிரான முதலாவது டெஸ்டுக்கான பங்களாதேஷ் குழாமில் காயமடைந்த முஷ்பிக்கூர் ரஹீமை டெஸ்ட் போட்டிகளில் இதுவரையில் அறிமுகத்தை மேற்கொள்ளாத தௌஹிட் ஹிரிடோய் மூலம் பங்களாதேஷ் கிரிக்கெட் சபை பிரதியிட்டுள்ளது.

# 59ஆவது தடகள போட்டி

இலங்கை இராணுவ-படையணிகளுக்கு-இடையிலான 59 வது விளையாட்டு தடகள விளையாட்டுப் போட்டி தியகம மஹிந்த ராஜபக்ஷ மைதானத்தில் வெள்ளிக்கிழமை (22) ஆரம்பமாகும்.

இப் போட்டியின் ஆரம்ப விழா-இராணுவ பதவி நிலை பிரதானி மேஜர் ஜெனரல் ஹரேந்திர பீரிஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

59ஆவது இலங்கை இராணுவ-படையணிகளுக்கு இடையிலான தடகள விளையாட்டுப் போட்டிகளில் 21 படையணிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி 575 வீர வீராங்கனைகள் 26 நிகழ்வுகளில் போட்டியிடவுள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற 58ஆவது இலங்கை இராணுவ படையணிகளுக்கு இடையிலான




தடகள விளையாட்டுப் போட்டியில், கோலூன்றிப் பாய்தல் ஆண்கள், முப்பாச்சல் ஆண்கள், பெண்கள் மற்றும் ஆண்களுக்கான 10,000 மீற்றர் நடை போட்டி மற்றும் 200 மீற்றர் தொடர் அஞ்சல் ஓட்டம் ஆகியவற்றில் இராணுவ விளையாட்டு வீர வீராங்கனைகள் ஐந்து புதிய தேசிய சாதனைகளைப் படைத்தனர் என்பது குறிப்பிடதக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 22, மார்ச் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.